தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 15 மடல் 3 மார்ச் – 2015 ₹1.00

## சிகிச்சையியல் பாடத்திட்டம் திருத்தியமைத்தல் தொடர்பான கூட்டம்



சிகிச்சையியல் பாடங்களின் பாடத் திட்டத்தைத் திருத்தியமைத்தல் தொடர்பாகச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 23.02.2015 மற்றும் 24.02.2015ஆம் தேதிகளில் இந்தியக் கால்நடை மருத்துவக் கழகத்தின் கல்விக் குழுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்தைத் துவக்கிவைத்து, உரை ஆற்றினார். புதுதில்லி, இந்தியக் கால்நடை மருத்துவக் கழகத்தின் துணைத் தலைவர் மற்றும் கல்விக் குழுத் தலைவர் டாக்டர் குர்தியல் சிங், பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் ம. திருநாவுக்கரசு, சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் டி.என். கணேஷ், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் (பொ.) முனைவர் சி. பாலச்சந்திரன் மற்றும் நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு கால்நடை மருத்துவக் கல்லூரிகளின் பேராசிரியர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் புதிய கட்டடங்களின் திறப்பு விழா



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியால் கட்டப்பட்ட பால் பதனிடும் நிலையம், கோழியின மூலக்கூறு ஆய்வகம், உறைவிந்து நிலையம், மாடுகளில் கருத்தரிக்காமையைக் கண்டறிதல் மற்றும் பயிற்சி மையம், மாணவர்கள் மையம் ஆகியவற்றின் திறப்பு விழா 06.02.2015 அன்று நடைபெற்றது. புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கால்நடை அறிவியலின் இணைத் தலைமை இயக்குநர் முனைவர் கே.எம்.எல். பதக் அவர்கள் கட்டடங்களைத் திறந்துவைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். அவர் தம் தலைமை உரையில் பால் பதனிடும் நிலையம், விவசாயிகள் பால் மதிப்பூட்டத் தொழில்நுட்பங்களில் பயிற்சி பெறவும் மற்றும் பாலை மதிப்பூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பனை செய்யவும் உதவும் என்றார். முன்னதாக, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் கொ. ஆ. துரைசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறையின் (பால்வள அறிவியல்) பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ. இளங்கோ அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## அனைத்திந்திய இணைப்புத் திட்டம் துவக்கம்

கால்நடைகளில் நோய்கண்டறிதல் மற்றும் அறுவைச் கிகிச்சை மேலாண்மை குறித்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அனைத்திந்திய இணைப்புத் திட்டம், அதன் மையங்களில் ஒன்றான சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 18.02.2015அன்று துவக்கிவைக்கப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கால்நடைகளில் நோய்கண்டறிதல் மற்றும் அறுவைச் கிகிச்சை மேலாண்மை குறித்த இணைப்பு மையத்தைத் திறந்துவைத்து, திட்டத்தைக் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறையின் ஊடுகதிரியக்கவியல் பிரிவில் துவக்கிவைத்தார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி யின் முதல்வர் (பொ.) முனைவர் சி. பாலச்சந்திரன், திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் டி.என். கணேஷ் ஆகியோர் பங்கேற்றனர். இந்தத் திட்டம் நோய்கண்டறிதல், ஆலோசனை, பயிற்சி மற்றும் இணையவழி மருத்துவமனைப் பதிவேடு பராமரிப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளும். கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறை தரவுகளை எண்மயமாக்கல் பணியில் ஈடுபடும். மேலும், இந்தியா முழுவதும் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகளின் சிகிச்சையியல் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நன்மைக்காகத் தரவுகளைப் பயிற்சி மருத்துவமனையின் வலைத்தளத்தோடு பகிர்ந்துகொள்ளும்.

## அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம்

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் ஒன்பதாவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம், குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தின் பன்னிரண்டாவது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் ஆகியவை முறையே அந்தந்த நிலையங்களில் 13.02.2015 மற்றும் 14.02.2015ஆம் தேதிகளில் நடைபெற்றன. பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, வருங்காலத் திட்டங்கள் குறித்து கருத்துரை வழங்கினார். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன், பெங்களூர் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் எட்டாவது மண்டலத் திட்ட இயக்குநரகத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் எம்.ஜெ. சந்த்ரே கௌடா, அறிவியல் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## அறிவியல் கண்காட்சி – 2015

சென்னை அறிவியல் நகரம் 26.02.2015 முதல் 01.03.2015 வரை இராணி மேரி கல்லூரியில் நடத்திய சென்னை அறிவியல் திருவிழாவில் ஏற்பாடு செய்யப்பட்ட “உணவு மற்றும் வேளாண்மை” குறித்த அறிவியல் கண்காட்சியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பங்கேற்றது. கண்காட்சியின் துவக்க விழாவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்று, வாழ்த்துரை வழங்கிக் கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார். பல்கலைக்கழகத்தின் பலவித செயல்பாடுகள் மற்றும் சாதனைகளின் பல்வேறு மாதிரிகள், செயல் விளக்கும் மாதிரிகள், பொதுமக்களைக் கவரக்கூடிய மாதிரிகள், கருத்துப் பகிர்வுக்கான பலகைகள் ஆகியவை பல்கலைக்கழக அரங்கில் இடம்பெற்றிருந்தன. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் (பொ.) முனைவர் சி. பாலசந்திரன், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் ஆகியோர் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டனர். கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்நிகழ்வாய்வியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எல். குணசீலன் அவர்கள் கண்காட்சி அரங்கை ஒருங்கிணைத்தார். 20,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பல்கலைக்கழக அரங்கைப் பார்வையிட்டனர்.

## இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாம் – 2015

மாதவரம்பால்பண்ணை,கால்நடைமருத்துவப்பல்கலைக்கழகப் புறநகர் மருத்துவமனையில் 11.02.2015அன்று இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் செல்லப்பிராணிகளுக்குத் தடுப்பூசி அளித்து முகாமைத் துவக்கிவைத்து, பல்கலைக்கழகம் வழங்கிவரும் உயர்சிகிச்சை குறித்து எடுத்துரைத்தார். சிகிச்சையியல் இயக்குநர் (பொ.) முனைவர் டி.என். கணேஷ் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றார். முகாமில் 284 செல்லப்பிராணிகளுக்கு இலவச வெறிநோய்த் தடுப்பூசி போடப்பட்டது.

## சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி

### பன்னாட்டுக் கலந்தாய்வரங்கு



“வளர்ந்து வரும் நாடுகளின் கால்நடை மரபுசார் வளங்களின் வலுவான மேம்பாடு மற்றும் அவற்றின் வாழ்வியல் பாதுகாப்பு” என்ற தலைப்பிலான இரண்டு நாள் பன்னாட்டு கலந்தாய்வரங்கு மற்றும் “வளர்ப்பு பிராணிகளின் பன்மயப் பாதுகாப்பு சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டு மாநாடு”, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகம் மற்றும் கால்நடை மரபுசார் வளத் தேசிய நிறுவனத்தைச் சார்ந்த வளர்ப்புப் பிராணிகளின் பன்மயப் பாதுகாப்பு சங்கம்மூலம் 13.02.2015 மற்றும் 14.02.2014ஆம் தேதிகளில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. கல்லூரியின் அடிப்படை அறிவியல் புல முதல்வர் (பொ.) முனைவர் ந. தானியல் ஜாய் சந்திரன் அவர்கள் விழாவிற்கு வருகை தந்தவர்களை வரவேற்றுப் பேசினார். பல்கலைகழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கால்நடை உற்பத்தி மற்றும் இனப்பெருக்கத்தின் உதவித் தலைமை இயக்குநர் முனைவர் ஆர்.எஸ். காந்தி அவர்கள் ஆய்வுச் சுருக்கத் தொகுப்பை வெளியிட்டுத் தொடக்கவுரை ஆற்றினார். கால்நடை மரபுசார் வளத் தேசிய நிறுவன இயக்குநர் மற்றும் வளர்ப்புப் பிராணிகளின் பன்மயப் பாதுகாப்புச் சங்கத் தலைவர் முனைவர் அர்ஜவ சர்மா, பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கால்நடை இனப்பெருக்கத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ்.என். சிவசெல்வம் அவர்கள் நன்றியுரை வழங்கினார். பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுக் கல்வி நிலையங்களைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள், பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 32 கால்நடைப் பண்ணையாளர்கள் உட்பட 280 பேர் ஆய்வரங்கத்தில் கலந்துகொண்டனர். ஆய்வரங்கத்தின் நிறைவு விழாவில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் (பொ.) முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி நிறைவுரை ஆற்றினார். மீரட்டில் உள்ள மத்திய மாட்டின ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் பி. பிரகாஷ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். விழா அமைப்பாளர் மற்றும் உயிர்நுட்பத் தகவல் மையப் பேராசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பெ. குமாரசாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## பன்னாட்டுப் பயிலரங்கு

“சிறிய பிராணிகள் பல்மருத்துவம்” குறித்த பன்னாட்டுப் பயிலரங்கு ஜியோடிஸ் இந்தியா தனியார் நிறுவனத்தின் நிதியுதவியில் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல்மூலம் 18.02.2015அன்று நடத்தப்பட்டது. அமெரிக்காவின் பிலடெல்பியாவின் சான்றளிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சை மருத்துவர் ரவீந்திர முரர்கா அவர்கள் விரிவுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, அறுவைச் சிகிச்சை மருத்துவரை வாழ்த்திப் பேசினார். தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 50 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

## விளையாட்டு நாள் விழா



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஆண்டு விளையாட்டு நாள் விழா 09.02.2015அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சிறப்புரை ஆற்றிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் க. குமணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விளையாட்டு அமைப்பின் செயலாளர் முனைவர் ஆர். ஸ்ரீதர் அவர்கள் ஆண்டு விளையாட்டுப் போட்டி அறிக்கை அளித்தார். ஆடவர்க்கான ஒட்டப்பந்தய வாகையர் பட்டத்தைக் கல்லூரியின் இளநிலைப் பட்ட (2010–2011) இறுதியாண்டு மாணவர் செல்வன் எம். சுதர்சன் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர் செல்வன் ஜி. பிரகாஷ் ஆகியோர் பகிர்ந்துகொண்டனர். ஒட்டுமொத்த விளையாட்டுப் போட்டிகளுக்கான வாகையர் பட்டத்தை நான்காம் ஆண்டு மாணவர்கள் வென்றனர். உடற்கல்வி இணை இயக்குநர் முனைவர் கே. சாந்தி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## சிறிய அசைபோடும் விலங்குகளில் அல்ட்ராசவுண்ட் மற்றும் எண்டோஸ்கோபி பயிற்சி

சிறிய அசைபோடும் விலங்குகளில் அல்ட்ராசவுண்ட் மற்றும் எண்டோஸ்கோபி குறித்த பயிற்சி, கேரளாவின் கால்நடைப் பராமரிப்புத் துறைசார்ந்த கால்நடை மருத்துவர்களுக்காகக் கல்லூரியின் கால்நடை நோய்க்குறியியல் துறையில் 23.02.2015முதல் 27.02.2015வரை நடைபெற்றது. பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

## கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி

“விலங்கின நோய்களைக் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்தலில் முன்னேற்றங்கள்” குறித்த பயிற்சி, இந்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையின் நிதியுதவியில் கல்லூரியின் கால்நடை நோய்க் குறியியல் துறையில் 28.01.2015முதல் 04.02.2015வரை நடைபெற்றது. தமிழ்நாடு, கேரளாவைச் சார்ந்த 17 களப்பணிக் கால்நடை மருத்துவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சி நிறைவு விழாவில் பங்கேற்று, நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன், அடிப்படை அறிவில் புல முதல்வர் (பொ.) முனைவர் ந. தானியேல் ஜாய் சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பயிற்சி இயக்குநராகச் செயல்பட்டார்.

## பெண் பணியாளர் அறை – துவக்க விழா

பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் “பெண் பணியாளர் அறையை” சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 04.02.2015அன்று துவக்கிவைத்தார். கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் சி. பாலசந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர்(பொ.) முனைவர் ந. தானியேல் ஜாய் சந்திரன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### வேளாண் வானிலை பற்றிய விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்




வேளாண் வானிலை பற்றிய விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி, 26.02.2015 அன்று கல்லூரியின் கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் பங்கேற்று, தேர்வுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு மழைமானியை வழங்கினார். சேலம், இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் உதவி வானிலை ஆய்வாளர் திரு. மாதேஸ்வரன் அவர்கள் மழைமானியைப் பயன்படுத்தும் முறையை விளக்கினார். ஆத்மா திட்டம் மற்றும் வேளாண் அறிவியல் நிலைய விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

### பெருகிவரும் கோழியின நோய்கள் குறித்த பயிற்சி

கல்லூரியின் கோழியின அறிவியல் துறையின் ஆசிரியர் உயர் பயிற்சிமூலம் “நீடித்த கோழியின உற்பத்தி மற்றும் சந்தை வாய்ப்புக்குப் பெருகிவரும் கோழியின நோய்களைக் கட்டுப்படுத்தல்” குறித்த மூன்றாவது தேசிய அளவிலான பயிற்சி, 04.02.2015முதல் 24.02.2015வரை நடத்தப்பட்டது. மொத்தம் 16 பேர் பயிற்சியில் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### கால்நடை வளர்ப்பு சம்மந்தமான இடுபொருட்கள் வழங்குதல் மற்றும் பயிற்சி அளித்தல்




திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமானது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கால்நடை வகை நுண்ணுயிரிகளைச் சேகரிக்கும் ஒருங்கிணைந்த துணைத் திட்டத்தின் “செம்மறியாடு வளர்ப்பு” பயிற்சியை 22.02.2015அன்று நடத்தியது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, “செம்மறியாடு வளர்ப்பு அடிப்படைகள்” குறித்த பயிற்சிக் கையேட்டை வெளியிட்டு, செம்மறியாடு, தீவனம் மற்றும் தனுவாஸ் தாதுப்புக் கலவை ஆகியவற்றைக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் மலைவாழ் மக்களுக்கு வழங்கினார். அவர் தமது தலைமையுரையில் மிகுந்த பயனை அடைவதற்குச் செம்மறியாடு வளர்ப்பில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார். கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். திருநெல்வேலி மாவட்டத்தின் தலயானை கிராமத்திலிருந்து மொத்தம் 30 மலைவாழ் விவசாயிகள் பங்கேற்றனர்.

### வயல்வெளிப் பள்ளி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் திருநெல்வேலி ஆத்மா திட்டமும் இணைந்து “மேம்பட்ட கால்நடை வளர்ப்பு முறைகள்” குறித்த வயல்வெளிப் பள்ளியைத் திருநெல்வேலி மாவட்டத்தின் மானூர் வட்டத்தின் களக்குடி கிராமத்தில் 07.02.2015முதல் 19.02.2015வரை ஆறு வாரங்களுக்கு நடத்தின. கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, பயிற்சிக் கையேடு வெளியிட்டு, சான்றிதழ், ஸ்மார்ட் தாதுப்புக் கலவை, கறவை மாடு வளர்ப்பு, செம்மறி மற்றும் வெள்ளாடு வளர்ப்பு , நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த வீடியோ பாடங்களைப் பயனாளிகளுக்கு வழங்கினார். மானூர் வட்டத்தைச்

Posted on 27.03.2015 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25.03.2015

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

சார்ந்த 25 முன்னோடிப் பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன் பெற்றனர்.

### கறவை மாடு வளர்ப்புப் பயிற்சி

“கறவை மாடு வளர்ப்பு” குறித்த மூன்று நாள் பயிற்சி நான்கு தொகுதிகளாகத் திருநெல்வேலி மாவட்டத்தின் புதுவாழ்வுத் திட்டப் பயனாளிகளுக்கு 2015 பிப்ரவரி மாதத்தில் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். மொத்தம் 139 பயனாளிகள் பங்கேற்றனர்.

## ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### துணைவேந்தர் ஆய்வு

பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 21.02.2015அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை புரிந்தார். கல்லூரியின் முதன்மைக் கட்டடம், பயிற்றுவிக்கும் கால்நடைப் பண்ணை வளாகம், கால்நடைச் சிகிச்சையியல் வளாகம், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்ப மையம், ஆடவர் மற்றும் மகளிர் விடுதிகள் முதலான பல்வேறு கட்டடங்களின் கட்டடப் பணிகளை ஆய்வுசெய்தார்.

## விரிவாக்கப் பணி

### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்மூலம் பால் பண்ணை உதவியாளர், பால் பதனநிலைய உதவியாளர், கால்நடைப் பண்ணை மேலாளர், கோழிப் பண்ணை மேலாளர், கோழி இனப்பெருக்கப் பண்ணை மேற்பார்வையாளர், வெள்ளாடு வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, கால்நடைப் பண்ணைக் கழிவுகளின் மேலாண்மை, முயல் வளர்ப்பு குறித்த செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் பால்வள அறிவியல் துறை, மதுரை, விழுப்புரம், வேலூர், மேல்மருவத்தூர், சேலம், ஈரோடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; தேனி உழவர் பயிற்சி மையம், மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையம் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை ஆகியவற்றில் பிப்ரவரி 2015இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 83 பேர் பதிவுசெய்து பயிற்சியை நிறைவுசெய்தனர்.

### ஆத்மா – செயல்முறை விளக்கம்

இராஜபாளையம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் குடற்புழு நீக்கம் மற்றும் உண்ணி நீக்கம் குறித்த இரு களநிலையிலான செயல்முறை விளக்கங்கள் முறையே கிருஷ்ணாபுரம், சுந்தரராஜா வெள்ளாட்டுப் பண்ணை மற்றும் டி. கரிசல்குளம், வெங்கடசாமி வெள்ளாட்டுப் பண்ணையில் 17.02.2015 மற்றும் 26.02.2015ஆம் தேதிகளில் செய்துகாட்டப்பட்டன.

## நாட்டுநலப் பணித் திட்டச் செயல்பாடுகள்



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுகள், “தேசியப் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் 2014–15ஐ” சி.பி. ராமசாமி ஐயர் பவுண்டேஷனுடன் இணைந்து நடத்தின. “மண் வளம் மற்றும் பாதுகாப்பு” குறித்த விழிப்புணர்வு முகாம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு மற்றும் மாதவரம், பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணைமூலம் 21.02.2015அன்று நடத்தப்பட்டது. முகாமில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், சென்னை ஜிஎஸ்எஸ் மகளிர் ஜெயின் கல்லூரியைச் சார்ந்த மொத்தம் 90 தன்னார்வத் தொண்டர்கள் பங்கேற்றனர். சென்னை, சுற்றுச்சூழலியல் ஆராய்ச்சி பவுண்டேஷனின் இயக்குநர் டாக்டர் சுல்தான் அஹமத் இஸ்மாயில் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து, முதன்மையுரை ஆற்றினார். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் நாமக்கல், திரு என்எஸ்ஏயு அரசு மேனிலைப் பள்ளி மாணவர்களுக்காகப் பல்வேறு போட்டிகள் 19.02.2015அன்று நடத்தப்பட்டன. பள்ளி வளாகத்தில் 50 மரக்கன்றுகள் நடப்பட்டன. 250 மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் என். குமாரவேல் மற்றும் மருத்துவர் ஏ. அருள்மொழி ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்தனர்.

### பணி ஓய்வு



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நோய்க்குறியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். சுப்பிரமணியன் அவர்கள் 28.02.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 01.03.1955இல் பிறந்த இவர், 34 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.